ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2446/44 - 2025 ජූලි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.24

2446/44 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : BD/LG/LND/2/9/2.
காணி அமைச்சின் இல. : 4-3/8/2016/PC/407.

பது/ கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் லுணுகலை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ரேந்தபொல 94ஜே கிராம அலுவலர் பிரிவில் யபம்ம உடகம (இ.கி.வ. 542) கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரல் வரைபட இல. 710193 இல் தொகுதி இல. 03 இல் தாள் இல. 01 இல் துண்டு இல. 1 இன் எல்லைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது :

**01. துண்டு இல. 1 - காணியின் பெயர் : ஹொப்டன் தோட்டம் ; விஸ்தீரணம் : 0.8094 ஹெக்டயார்**

வடக்கு : இ.கி.வ. 542 இன் காணித்துண்டு இல. 1006, 1033 மற்றும் 421; கிழக்கு : இ.கி.வ. 542 இன் காணித்துண்டு இல. 421 மற்றும் காணித்துண்டு இல. 420 இன் ஒரு பகுதி; தெற்கு : இ.கி.வ. 542 இன் காணித்துண்டு இல. 420 இன் ஒரு பகுதி; மேற்கு : இ.கி.வ. 542 இன் காணித்துண்டு இல. 420 இன் ஒரு பகுதி மற்றும் காணித்துண்டு இல. 1006.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு லுணுகலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். புவனேந்திரன்,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
லுணுகலை,
2025, யூலை 21.

EOG 07 - 0294

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் தொடர்பு இல.: DSM/WL/LND/4/3/8/8/27
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் தொடர்பு இல.: 03J/91/IR/176.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2436/13 ஆம் இலக்கம் மற்றும் 2025.05.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்த மானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் உரித்து பரிசீலனை செய்யப்படும் திகதி 2025.10.08 ஆந் திகதியாக மாற்றமடைய வேண்டும் என்பதினை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச்.எம்.ஐ. சிரிவர்தன,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மாத்தளை.

EOG 07 - 0296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.